# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590

ஆணை நாள் 10.11.2020

**முன்னிலை**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 5446/B/2019**

திரு. C. பால்ராஜ், மேல்முறையீட்டாளர்

எதிர்

பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
மேட்டூர் வட்டம்,
சேலம் மாவட்டம். பொது அதிகார அமைப்பு

**ஆணை**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு.பால்ராஜ் மற்றும் பொது தகவல் அலுவலர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 8.2.2019 தேதியிட்ட மனுவில், சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், ஆவடத்தூர் கிராமம், ரிச எண்.274/2 என்ற எண்ணுடைய நிலத்தை பற்றி சிவ விவரங்களை தகவலாக கோரி பொது தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. பொது தகவல் அலுவலரிடமிருந்து தகவல் எதுவும் பெறப்படாத நிலையில், மனுதாரர், 5.4.2019 தேதியிட்ட மனுவில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு

விண்ணப்பித்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் தகவல் பெறப்படாததால் தகவல்களை பெற்றுத் தருமாறு தெரிவித்து, மனுதாரர் 12.6.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4.. பொது தகவல் அலுவலர் மனுதாரருக்கு உரிய தகவலை ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அதன் நகலினை ஆணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டார். பொது தகவல் அலுவலர், 11.11.2020 தேதியிட்ட கடிதத்தின் மூலம் மனுதாரருக்கு தகவல் வழங்கி, அதன் நகலினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். பொது தகவல் அலுவலரால் 11.11.2020 தேதியிட்டு மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது என்று ஆணையம் பதிவு செய்து, இவ்வழக்கின் மீது மேல்விசாரணை இல்லை என்பதால் இவ்வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 5446/B/2019**

**பெறுநர்**

பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
மேட்டூர் வட்டம்,
சேலம் மாவட்டம்.

மனுதாரர்
திரு.C. பால்ராஜ், த/பெ சின்னதம்பிகவுண்டர்,
கவுண்டர் தெரு, சவுரியூர் அஞ்சல்,
ஆவடத்ததூர் கிராமம்,
ஜலகண்டபுரம் வழி,
மேட்டூர் வட்டம்,
சேலம் மாவட்டம் - 636 501.

Copy to: File
SS/PA-18.11.2020